முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 3/2017

நாள். 22.01.2026 பி.வா.சா.1 – திரு. வேல்சாமி

த/பெ - திரு.ராமலிங்க நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) நீங்கள் காம்பவுண்ட் சுவர் கட்டும் போது 1ம் வாதியின் மனைவி உங்கள் மீது பணகுடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரி தான். காவல் நிலையத்தில் உங்களை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரி தான். வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யக் கூடாது என காவல் நிலையத்தில் அறிவுரை வழங்கினார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் வா.சா.ஆ.3 கேவியேட் மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான்.

2) உங்கள் வழக்கறிஞர் மூலமாக வாதிகளுக்கும், காவல் துறைக்கும் வா.சா.ஆ.4 மூலம் அறிவிப்பு அனுப்பினீர்கள் என்றால் சரி தான். வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்து காம்பவுண்ட் சுவர் கட்டினீர்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே தீர்ப்பாகி விட்டது. வழக்கு சொத்தில் உங்களுக்கோ, 1ம் பிரதிவாதிக்கோ எந்த வித உரிமையும் பாத்தியதையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.22 05:03:05 +0530

3) வழக்கு  சொத்து சம்மந்தமாக ஏற்கனவே தீர்ப்பாகி விட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்கு உங்களுக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்றும் வழக்கு சொத்தை வாதிகளுக்கு ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தி சுவாதீனம் கொடுக்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி கோரி உள்ள சுவாதீன பரிகாரமும் மற்ற பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக் கூடியது என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.22 05:03:12 +0530